# தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப ஆணைக்குழு

## ஆண்டறிக்கை 2011

NASTEC


223C,நாவல வீதி,
நாரஹென்பிட்டி, கொழும்பு 5
தொ.பே: 011 – 2807945,
2807346
தொலை நகல் : 2807347
மின்னஞ்சல் : *nastecsl@yahoo.com*
வலையமைப்பு : *www.nastec.lk*

ஆண்டறிக்கை 2011

இது ஒரு தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப ஆணைக்குழு (NASTEC) வெளியீடு.

திருத்தப்பட்டது : கலாநிதி. முதித்த லியன கெதரவினால்.

பதிவு செய்யப்பட்டது : திருமதி. நில்மினி பெரேராவினால்.

புரட்டாதி 2012.

உள்ளீடு


எம்மைப் பற்றி…………………………………………………………………….. 04

பணிப்பாளரின் செய்தி…………………………………………………….….. 06

ஆணைக்குழு அங்கத்தவர்கள்…………………….……………………… 07

நிறுவன அமைப்பு……………………………….………………………….…… 08

செயற்பாடுகள் :விஞ்ஞான தொழில்நுட்ப நிறுவனங்களின் மீளாய்வு …………. 10

நிறுவனங்கள் விஞ்ஞான தொழில்நுட்ப கொள்கைகளை விருத்தி செய்தல்….. 11

*BICOST*………………………………………………………….………. 11

ஆய்வுக் குழுக்கள்……………………..…………………….…… 11

தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப மீளாய்வு…………………….…… 12

இளம் விஞ்ஞானிகளின் ஆய்வுக்கூட்டம்……………….…………… 12

பணிப்பாளர்களின் ஆய்வுக்கூட்டம்……………………………….. 14

பிற செயற்பாடுகள்………………………………………….............. 14

சர்வதேச தொடர்புகள்……………………………………………………… 15

எமது பணியாளர்கள்…………………………………………………………. 17

பணியாளர்களின் செய்திகள்……………………………………………….. 17

நிதி அறிக்கை……………………………………………………………………. 19

கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை……………………………..…. 22

தொடர்பிற்கான தகவல்கள்…………………………………………………... 30

**எம்மைப் பற்றி**

தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப ஆணைக்குழுவானது (*NASTEC*) 1994 ஆம் ஆண்டின் விஞ்ஞான தொழில்நுட்ப அபிவிருத்திச் சட்டம் 11இன் பிரகாரம் ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன், 1998 ஆவணி முதல் அமுலுக்கு வந்தது. இது அதிகாரபுர்வமாக 1998 மார்கழி 6 ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன் 1999 தை மாதத்திலேயே ஒரு தொழிற்பாட்டு நிறுவனமாக மாறியது.*NASTEC*ஆனது*APEX*கொள்கைளை உருவாக்குதல், விஞ்ஞான தொழில்நுட்ப விடயங்களில் இலங்கை அரசுக்கு ஆலோசனை வழங்கும் அங்கமாகவும் உருவெடுத்து. ஆணைக்குழுவானது ஜனநாயக சோசலிசக் குடியரசின் ர்.நு. ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஏழு அங்கத்தவர்களைக் கொண்டுள்ளது.

**எமது பார்வை**

**“விஞ்ஞான தொழில்நுட்ப பயன்பாட்டின் மூலம் இலங்கை மக்களின் நல்வாழ்வை உச்ச அளவில் மேம்படச் செய்யும் ஒரு**

**எமது நோக்கம்**

**விஞ்ஞான தொழில்நுட்ப பிரயோகத்தின் மூலம் ஒரு நீடித்த நிலைத்து நிற்கும் அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்காக சட்டங்கள்**

## பணிப்பாளரின் செய்தி



நான் 2011இற்கான*NASTEC*இன் ஆண்டறிக்கையை அரசிற்காகவும் நாட்டின் விஞ்ஞான சமுதாயத்திற்காகவும் முன் வைக்கின்றேன். 2011 ஆம் ஆண்டிலும்*NASTEC*ஆனது விஞ்ஞான பணியாளர்களின் பற்றாக்குறையால் எதிர்பார்த்த வெளியீடுகளை தரமுடியாமல் சிரமப்பட்டது. ஆகவே கிடைக்கக்கூடியதாக விருந்த பணியாளர் உதவியுடன் வெளியீடை அதிகரிப்பதற்காக சில அத்தியாவசியமான செயற்பாடுகள் மிக இக்கட்டான சூழ்நிலையில் மிகக் குறுகிய காலத்தில் முன்னெடுக்கப்பட்டன.

இந்த வருடமானது *NASTEC* இன் விதங்துரைகளை மீளாய்வு செய்யும் ஆண்டாக அறிவிக்கப்பட்டிருந்தது. அணு சக்தி அதிகாரசபை, தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி நிறுவனம் ஆகிய இரண்டு நிறுவனங்களின் மீளாய்வும் முடித்து வைக்கப்பட்டது. இருப்பினும் மேலும் இவ்வாண்டிற்குள் மீளாய்வு செய்யப்பட வேண்டிய இரண்டு நிறுவனங்களின் மீளாய்வானது அவை தம் சுயமதிப்பீட்டு அறிக்கைகளை எமக்கு ஒப்படைப்பதில் எற்பட்ட தாமதம் காரணமாக இவ்வாண்டிற்குள் மீளாய்வு செய்யப்படமுடியவில்லை. ஒரு திருத்தமான தரவு சேகரிக்கும் உபகரணமானது வருடாந்த தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப மீளாய்விற்கான தரவுகளை சேகரிப்பதற்காக உருவாக்கப்பட்டுள்ளது. தரவு சேகரித்தல் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. முன்னைய வருடத்தின் தரவுகளை தற்போதைய ஆண்டின் முதல் கால்பகுதியில் சேகரித்தல் நடைமுறையில் சிக்கலான விடயம் என்பதை இது கண்டுபிடித்துள்ளது.இதனால் குறித்த நேரத்தில் அறிக்கை சமர்ப்பித்தல் பாதிக்கப்படுகிறது.

7வது இரண்டாண்டுக்கொருமுறை நிகழும் விஞ்ஞான தொழில்நுட்ப மாநாட்டிற்கான (*BICOST - VII*) ஆயத்த வேலைகள் ஆண்டின் இறுதிப்பாதியில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. APEX, NASTEC இற்கு ஆலோசனை பங்காளர், பணிப்பாளர்களின் ஆய்வுக்கூட்டங்கள் கருத்திலெடுக்கப்பட்டு அவர்களின் கருத்துகள் ஒரு பொருத்தமான கருப்பொருளை BICOST - VII இற்காக தேர்வு செய்ய ஆராயப்பட்டன. *NASTEC*ஆனது தனது வழமையான செயற்பாடுகளான வினைத்திறன் அபிவிருத்தி தொழிற்பட்டறைகள், YSF விருதுகள், ஆராய்ச்சி அமைப்புகளுடனான வருடாந்த பொதுக்கூட்டங்கள் போன்ற இளம் விஞ்ஞானிகளின்(YSF) கருத்துமன்றங்கள் போன்றவற்றை இவ்வாண்டிலும் தொடர்ந்தது.

*NAM S&T* நிலையம், *BIMSTEC* ஆகியவற்றுடனான செயற்பாடுகளுடன் இவ்வாண்டு *NASTEC* ஜப்பான் விஞ்ஞான கழகத்துடன் (*SCJ*) இணைப்பை ஏற்படுத்தியுள்ளது. *SCJ*ஆனது *NASTEC*ஐ ஆசியாவின் விஞ்ஞான கழகத்துடன் இணைய அழைப்பு விடுத்துள்ளது.

மிகப்பெரிய பின்னடைவை, *NASTEC* இன் வினைத்திறனான செயற்பாட்டை, போதுமான அளவு விஞ்ஞான அறிவுள்ள பணியாளர்களின் பாரிய பற்றாக்குறை கடந்த இரண்டு வருடகாலமாக ஏற்படுத்தியுள்ளது. இந்நிலை முழுதுமாக உணரப்பட்டு புதிய வேலைவாய்ப்பு திட்டங்களில் கருத்திற் கொள்ளப்பட்டால் வெற்றிடங்கள் நிரப்பப்பட்டு இது நிறுவனத்தின் நடவடிக்கைகளில் மாற்றத்தை ஏற்படுத்தும். இப்படியான நிலை வந்தால் பணிப்பாளர் போன்ற மூத்த அதிகாரிகள் வழமையான நாள் வேலைகளில் நேரத்தை வீணாக்காமல் கண்காணிப்பிற்குஅவர்களிற்கு போதுமான நேரம் கிடைக்கும், நிறுவன நடவடிக்கைகளை வழிநடத்தவும் ஆக்கபூர்வமாக சிந்தித்து புதிய விடயங்களை செய்யவும் முடியும். சம்பந்தப்பட்ட அதிகார சபைகள் வினைத்திறனான ஒரு *S&T* அமைப்பை காணவேண்டுமெனில் இந்நிலையின் உண்மைத்தன்மையை விளங்கிக் கொள்ளவேண்டும்.

பணியாளர்கள் குறைவான நிலையிலும ் *NASTEC* இன் அத்தியாவசியமான செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கான *NASTEC* பணியாளர்களின் அர்ப்பணிற்பிற்கு இச்சந்தர்ப்பத்தில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி.
கலாநிதி. முதித்த லியனகெதரஇ பதில் பணிப்பாளர்.

## ஆணைக்குழு அங்கத்தவர்கள்

**பேராசிரியர்.நாளினி *B.* ரத்னசிரி**

**தலைவர்**



பூச்சியியல் : விலங்கியலில் மாண்புடன் ஒய்வுபெற்ற பேராசிரியர், இலங்கை திறந்த பல்கலைக்கழகம் பூச்சியியல் ஆராய்ச்சி உத்தியோகத்தர், விவசாய திணைக்களம் (1966 – 1974) 'பூச்சியியல் ஆராய்ச்சி உத்தியோகத்தர், வன பாதுகாப்பு திணைக்களம் (1974 - 1983) விலங்கியல் பேராசிரியர் (1983 - 1986), ஸ்தாபகர், பீட தலைவர், இயற்கை விஞ்ஞானங்கள் பீடம் (1986 - 1992), விலங்கியலில் மூத்த பேராசிரியர்(1986 - 2005), இலங்கை திறந்த பல்கலைக்கழகம் அங்கத்தவரும் உப தலைவரும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (1993- 1994) தலைவர், GEF இன் தேசிய கண்காணிப்புக்குழு /*UNDP* சிறு நிதியுதவி திட்டம் அங்கத்தவர், EU இன் தேசிய கண்காணிப்பு குழு/*UNDP* இன் அயனமண்டல காடுகளை முன்னேற்றுவதற்கான திட்டம் அங்கத்தவர், பல்கலைக்கழக கல்விக்கான பிரத்தியேக செயற்குழு, தேசிய கல்வி ஆணைக்குழ் அங்கத்தவர், தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப ஆணைக்குழு (2003 - இன்றுவரை), தலைவர், தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப ஆணைக்குழு (2005 - இன்றுவரை).

**வித்யா ஜோதி பேராசிரியர் *K.K.Y.W.* பெரேரா**



பொறியியலாளர், இலத்திரனியல் பொறியியல் போராசிரியர் தலைவர், நவீன தொழில்நுட்பங்களிற்கான ஆதர் *C.* கிளார்க் இன் நிலையம் ஸ்தாபகர், தலைவர்,*NERD* நிலையம் (1974 - 1977) தலைவர்,*CEB* (1977 - 1989) செயலாளர், வலு, சக்திக்கான அமைச்சரவை (1981 - 1990) உம் (2001 - 2003) தலைவர், பொறியியலாளர்களின் சங்கம், இலங்கை (1985 - 1986) மாண்புடன் ஒய்வு பெற்ற பேராசிரியர், மொறட்டுவ பல்கழைக்கழகம் பணிப்பாளர் *ADB S&T* சுய அபிவிருத்தி திட்டம் (1997 - 2001).

**போராசிரியர் *H.P.M.* குணசேன**



பயிரியலாளர், பயிர் விஞ்ஞானத்தில் மாண்புடன் ஓய்வுபெற்ற போராசிரியர், பேராதனைப் பல்கலைக்கழகம் (1982) பீடாதிபதி, விவசாய பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம் (1982 - 1994) கல்லூரி அதிபர், வயம்ப பல்கலைக்கழக கல்லூரி (1996 - 1998) பணிப்பாளர், விவசாய பட்ட மேற்படிப்பு நிறுவகம் (1997 - 2002) அங்கத்தவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (1999 - 2005) தேசிய விஞ்ஞானக் கல்விச்சபையின் மூத்த உறுப்பினர் விவசாய அமைச்சரின் ஆலோசகர் (2007 - இன்றுவரை).

**கலாநிதி *C.T.S.B.* பெரேரா**



கைத்தொழிலியலாளர், நிர்வாக இயக்குநர், சம்சன் ரஜரட்ட ரைல்ஸ் தனியார் நிறுவனம் இயக்குநர், பிரமல் கிளாஸ் (சிலோன்) *PLC*.; இயக்குநர் கெலனி கேபிள்ஸ் PLC இயக்குனர் தன் கொட்டுவ பொர்சிலெயின் *PLC;* உப தலைவர், பொதுச் செலவுகள் ஆணைக்குழு் சபைக்குழு அங்கத்தவர்,*CRIB;* பணிப்பாளர், லங்கா புத்ரா அபிவிருத்தி வங்கி.

**கலாநிதி. பாலித அபயகோன்**



மருத்துவ தொழில் செய்பவர் (டாக்டர்), உலக சுகாதார நிறுவனத்திற்கும், சுகாதர அமைச்சரிற்கும் மூத்த ஆலோசகர் சுகாதார தொகுதிகள் அபிவிருத்தி, சுகாதார தொழில்நுட்பத்திற்கான முன்னாள் பணிப்பாளர், (*WHO*) தென் கிழக்கு ஆசிய பகுதி மூத்த ரெகெமி(Takemi) அங்கத்தவர் - ஹவார்ட் பல்கலைக்கழகம் அங்கத்தவர், சர்வதேச தோலியல் மருத்துவ பரிகரிப்பு வலைப்பின்னலின் இயக்குநர் சபை,*WHO* இன் தென் கிழக்காசியாவிற்கான மருத்துவக் கல்வி நிறுவனம் மற்றும் தென்கிழக்காசிய பொது சுகாதார கல்வி வலையமைப்பு இலங்கை *AIDS* அறங்கொடை நிதியத்தின் தலைவர்.

**பேராசிரியர் *W.D.* லக்ஸ்மன்**



பொருளியலாளர், கொழும்பு பல்கழைக்கழகம் தலைவர், சமூக விஞ்ஞானிகளின் கூட்டமைப்பு (1986 – 1988, 1994) தலைவர், இலங்கை பொருளியலாளர்களின் கூட்டமைப்பு (1990 - 1993) பீடாதிபதி, பட்டப்படிப்புகள் பீடம் (1992 - 1994) இலங்கை அறங்கொடை நிதி நிறுவனம் (1995 - 1997) துணைவேந்தர் (1994 - 1999) தலைவர், வியாபார முகாமைத்துவத்திற்கான தேசிய நிறுவனம் உப தலைவர்,வியாபார முகாமைத்துவத்திற்கான தேசிய அபிவிருத்தி அதிகார சபை அங்கத்தவர், *NARESA* (1997 - 1998) வருகைதரு பேராசிரியர், ரைக்கோகு (***Ryukoku***) பல்கலைகழகம், ஜப்பான் (1999 - 2001) பொருளியலின் மூத்த பேராசிரியர், கொழும்பு பல்கலைக்கழகம்.

## நிறுவன அமைப்பு




தொடர் கோடுகள் (_______) குறிப்பது நிரந்தர பதிவுகளை

முறிந்த கோடுகள் (--------) குறிப்பது தற்காலிக பதிவுகளை

## எமது செயற்பாடுகள்

### - விஞ்ஞான தொழில்நுட்ப மீளாய்வு-

விஞ்ஞான தொழில்நுட்ப நிறுவனங்களை மீளாய்வு செய்தல் ***NASTEC*** இன் ஒரு அத்தியாவசிய செயற்பாடாகும். இந்த நிறுவன மீளாய்வுகள் ***NASTEC*** இனால் விருத்தி செய்யப்பட்ட ஒரு மீளாய்வு முறை மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. அத்துடன் இது நிறுவன வெளியீட்டையும் முகாமைத்துவத்தையும் உள்ளடக்குகிறது. மீளாய்வு நடவடிக்கையானது ஒரு நிறுவனத்தின் சுய மதிப்பீட்டு அறிக்கையை (***SAR***) சமர்ப்பிக்ககோருவதுடன் ஆரம்பிக்கப்பட்டு மீளாய்விற்கான நேரம் நிர்ணயிக்கப்படுகிறது. ஒருமுறை SAR, ***NASTEC*** இற்கு சமர்ப்பிக்கப்பட்டால்,***NASTEC*** இனால் ஒரு மீளாய்வு பட்டியல் குழு நியமிக்கப்படும் இக்குழு ***SAR*** அடிப்படையில் மீளாய்வை மேற்கொள்ளும்.

2011 ஆம் ஆண்டில் நிறுவனம் மீளாய்வு செய்ய தீர்மானிக்கப்பட்டிருந்த நிறுவனங்களாவன அனுசக்தி அதிகாரசபை (***AEA***), தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் (***NBRO***), கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம் (***ITI***), நவீன தொழில்நுட்பங்களிற்கான ஆதர் ***C.*** கிளார்க்கின் நிறுவனம் (***ACCIMT***). இந்த நான்கு நிறுவனங்களில் இரண்டு நிறுவனங்களின் மீளாய்வு (அதாவது ***AEA, NBRO***) செய்து முடிக்கப்பட்டது. வேறு காரணங்களால் மற்றைய இரு நிறுவனங்களின் சுயமதிப்பீட்டு அறிக்கை சமர்ப்பித்தல் நேரம் தவறியமையால் அவற்றின் மீளாய்வுகள் பிற்போடப்பட்டன. ஆனாலும் ***ACCIMT*** ஆல் 2011 மார்கழியில் சுயமதீப்பீட்டு அறிக்கையை சமர்ப்பிக்க்க கூடியதாக இருந்தது.
அதே நேரத்தில் 2010 இல் மீளாய்வு செய்யப்பட்ட தெங்கு ஆராய்ச்சி நிறுவனத்தின் (***CRI***) மீளாய்வு அறிக்கை ***CRI*** இன் முகாமைத்துவ சபைக்கு முன்வைக்கப்பட்டது. அது சபையினால் நல்ல முறையில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

- **அனுசக்தி அதிகாரசபையின் (*AEA*) மீளாய்வு**

2010 இன் இறுதிப்பகுதியளவில் சுய மதிப்பீட்டு அறிக்கை பெறப்பட்டது ***NASTEC, AEA*** இன் சம்மதத்துடன் பின்வரும் மீளாய்வுக் குழுவை நியமித்தது.

பேராசிரியர். இந்திரதயாவன்ச (தலைவர்) - இலத்திரனியல் தொலைத்தொடர்பு பொறியியல் துறை, பொறியியல் பீடம், மொறட்டுவ பல்கழைக்கழகம்.
கலாநிதி . ***R. D*** குணரத்ன - இரசாயனவியல் துறை, விஞ்ஞானபீடம், கொழும்பு பல்கலைக்கழகம்
பேராசிரியர் சிவலி ரணவான - மிருக வைத்திய போராசிரியர் (ஓய்வு பெற்ற) திரு. ***A.*** பண்ணில்லா - தொழில்நுட்ப சேவைகள் துறை கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம்.

மீளாய்வை திட்டமிடுவதற்காக ***AEA*** பணிப்பாளருடன் ஆரம்பகட்ட பேச்சுவார்த்தை 2010 மார்கழி 6 இல் நடாத்தப்பட்டது. மீளாய்வு அணியானது 2010 தை 27ம், மாசி15ம் ***AEA*** இற்கு சென்று மீளாய்வு செய்தது.

மீளாய்வை சமப்படுத்தி முடிப்பதற்கு ***AEA***ஈனால் வழங்கப்படும் சேவைகள் பற்றிய,***AEA*** பங்குதாரர்களின் நோக்கங்களையும் கருத்துக்களையும் அறிந்து கொள்ள NASTEC ஒழுங்கு செய்த கூட்டமொன்று 2011 பங்குனி 11ம் திகதி நடைபெற்றது.

இதற்கு பின் ***NASTEC*** செயலகத்தில் நடந்த மீளாய்வுக் குழுவின் பல சந்திப்புகளின் பின்னர் 2011 ஆவணி 3ம் திகதி முதலாவது மாதிரிவரைபு அறிக்கை ***AEA*** இற்கு சமர்ப்பிக்கப்பட்டது. மீளாய்வு குழு இறுதி சந்திப்பாக ***AEA*** பணிப்பாளருடனும் மூத்த பணியாள்களுடனும் மீளாய்வு அறிக்கை பற்றி கலந்துரையாட 2011 ஐப்பசி 13ம் திகதி கூடியது. பேராசிரியர் இந்திர தயாவன்சவினால் ஆணைக்குழுவிற்கு 2011 கார்த்திகை வழங்கப்பட்ட இறுதி மீளாய்வு அறிக்கை, ஆணைக்குழுவின் அங்கீகாரத்தைப் பெற்றது.

♣ **தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் (NBRO) மீளாய்வு**

ஆனி 2011 இல் NASTEC, NBRO இனது சுய மதிப்பீட்டு அறிக்கையை பெற்றுக் கொண்டது. மீளாய்வுக் குழுவின் முதல் சந்திப்பு 2011 ஆடி 25ம் திகதி நடைபெற்றது. மீளாய்வு குழு பேராசிரியர் சாந்த மு. ஹென்னாயக்க (தலைவர்) புவியியல் துறை, கலைப்பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம் பேராசிரியர் ஹர்ஸ முனசிங்க கட்டிட நிர்மானத்துறை கட்டிட நிர்மாண பீடம், மொறட்டுவ பல்கலைக்கழகம் கலாநிதி ஜயலத் எதிரிசிங்க, கட்டிட பொறியியல் துறை, பொறியியல் பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம் கலாநிதி ஜகத் குணதிலக, மண்ணியல் துறை, விஞ்ஞான பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்ஆகியோரைக் கொண்டிருந்தது.

NBRO பணிப்பாளர் கலாநிதி ஆசிரி கருணாவர்த்தன, மூத்த உத்தியோகத்தர்களுடனான மீளாய்வுக் குழுவின் முதல் சந்திப்பு 2011 ஆவணி 3ம் திகதி நடைபெற்றது, இது 2011 ஆவணி 23 முதல் 25 வரையான மீளாய்வு விஜயங்களால் தொடரப்பட்டது. NBRO பங்குதாரர்களின் நோக்கம், கருத்துகளை அறிவதற்காக அவர்களுடனான சந்திப்பு NASTEC செயலகத்தில் 2011 ஆவணி 24ம் திகதி நடைபெற்றது. வருட இறுதியில் மீளாய்வு அறிக்கை தயார் செய்யப்பட்டுக் கொண்டிருந்தது.

## - தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப கொள்கைகளை முன்னெடுப்பதற்கான செயற்திட்டம் -

NASTEC இனால் 2008 இல் உருவாக்கப்பட்ட தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப கொள்கையானது அமைச்சரவை அங்கீகாரத்தை 2009 இல் பெற்றது. தேசிய S&T கொள்கையை விருத்தி செய்யும் வேளையில்,யேுளுவுநுஊ ஆனது கொள்கையை விரிவாக்கும் திட்டம் ஒன்றை உருவாக்கும் முயற்சியிலும் ஈடுபட்டுக்கொண்டிருந்தது. முதலாவது முயற்சி, ஆறாவது இரண்டாண்டுக்கொரு முறை நிகழும் விஞ்ஞான தொழில் நுட்ப மாநாடு (BICOST - VI)2010 இல் நிகழ்ந்தது. கொள்கையை முன்னேற்றும் ஒரு இடைக்காலத் தீர்வாக ஒன்றிணைக்கப்பட்ட நிறுவன செயற்திட்டம் ஒன்று கலந்தாலோசிக்கப்பட்டது. இந்த செயற்திட்டமானது, அடிப்படையில் ஆரம்ப கருக்களாக S&T கொள்கையில் பட்டியலிடப்பட்டவற்றுடன் நாட்டிலுள்ள S&T; நிறுவனங்களின் செயற்பாடுகள் செயற்படும் ஒழுங்கில் செல்லும். ஆயினும் இது கொள்கையை விரிவாக்க போதுமான பங்களிப்பாக இருந்தது.

இடைக்கால விரிவாக்கற் திட்டத்தின் போதாமை நிலை உணரப்பட்டமையால் இவ்வாண்டில் அழுத்தமான செயற்திட்டமொன்று விருத்தி செய்யப்பட்டது. கொள்கையில் கொடுக்கப்பட்ட ஆரம்ப கருக்களை விருத்தி செய்வதற்காக பயன்படுத்தப்படும் நாட்டிலுள்ள S&T நிறுவனங்களானவை செயற்பாடுகளை அறிக்கைப்படுத்துமாறு கேட்கப்பட்டன. இந்த தகவல்களை சேகரிப்பதற்காக கொள்கை ஆரம்பக்கருக்களை உள்ளடக்கிய செயற்திட்ட மாதிரியொன்று, அனைத்து S&T நிறுவனங்களுக்கும் அனுப்புவதற்காக தயாரிக்கப்பட்டது.

இந்த ஒருங்கிணைக்கப்பட்ட நிறுவன செயற்திட்டம் (IIAP) ஆனி மாதத்தில் நடைபெற்ற கருத்து மன்ற பணிப்பாளர்களின் கூட்டம் ஒன்றில் கலந்துரையாடப்பட்டது. IIAP, ன் விரிவாக்கலை கண்காணிப்பதுடன், NASTEC தம்முடன் வேலை செய்வதற்கு ஒரு இணைப்பு அதிகாரியை நியமிக்க கோரியது.

## -BICOST– VII-

♣ இலங்கையில் ஈராண்டுக்கொரு முறை நிகழும் விஞ்ஞான தொழில்நுட்ப மாநாடு (BICOST)

முன் BICOST - VII செயற்பாடுகள்

வருடத்தின் பிற்பாதியில் அடுத்த BICOST இன் கரு, உள்ளடக்கங்கள், எதிர்பார்க்கும் வெளியீடு / வெளிப்பாடு என்பன பற்றி விரிவாக ஆராயப்பட்டது.

மாநாட்டிற்கான பல உத்தேச கருக்கள் பிரேரிக்கப்பட்டு, கலந்தாலோசிக்கப்பட்டன. பின்னர் மாநாட்டின் விரிவான கருவாக ஆராய்ச்சி முடிவுகளை வர்த்தகமயப்படுத்தல் என்பது ஏகமனதாக தீர்மானிக்கப்பட்து. ஆணைக்குழு பின்வரும் தீர்மானங்களைப் பிரேரித்தது. அவை விரிவாக கலந்தாலோசிக்கப்பட்டன.

- சக்தி ஆராய்ச்சி உள்ளடங்கலான கைத்தொழில் நிறுவனங்களின் ஆராய்ச்சி தேவைகளை இனங்காணல். அவ்வாறன தேவைகளை பொது துறை சுரூனு நிறுவனங்களின் மூலம் நிவர்த்தி செய்தல்.
- பொது சுரூனு திட்டங்களை கைத்தொழில் நிறுவனங்களுடன் ஒன்றிணைத்து திட்டமிடல்.

BICOST - VII இன் பிரதான கண்காணிப்புக்குழுக் கட்டமைப்பு, செயற்படு குழுக்கள் பற்றி கலந்தாலோசிக்கப்பட்டது. மேற்கூறிய கலந்தலோசனைகளின் அடிப்படையில், தொழில்நுட்ப ஆராய்ச்சி அமைச்சரின் உடன்பாட்டைப் பெறும் நோக்கில் அவரிற்கு சமர்ப்பிப்பதற்காக ஒரு கருத்துப் பத்திரமானது தயாரிக்கப்படும்.

## -ஆய்வுக் குழுக்கள்-

### S&T இற்காக மனித வள (HR) அபிவிருத்தியை முன்னெடுக்கும் விசேட ஆய்வுக் குழு

தற்போதைய ர்சு தரவுகளை சேகரிக்கும் நோக்கில் NASTEC நடாத்திய ஆய்வின் விளைவாக, 28 பொது S&T நிறுவனங்கள் தரவுகளை சமா்ப்பித்தன. ஆவை ஆராயப்பட்டு ஆய்வுக் குழுவிற்கு சமா்ப்பிக்கப்பட்டன. சேகரிக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் ஒரு அறிக்கை தயாரிக்கப்பட்டது. அத்துடன்; S&T துறையிலுள்ள மனித வள தர மீளாய்வு முடிவுக்கு வந்தது.

## -தேசிய S & T மீளாய்வு-

### வருடாந்த தேசிய S & T மீளாய்வு 2009 – 2010

வருடாந்த தேசிய S&T மீளாய்விற்காக தயாரிக்கப்பட்ட தரவு சேகரிக்கும் மாதிரியானது மீளாயப்பட்டு, மீளாய்விற்கு தரவு சேகரிப்பதற்காக அனைத்து ளுரூவு நிறுவனங்களுக்கும் அனுப்பப்பட்டது. ஒவ்வொரு ளுரூவு நிறுவனமும் மீளாய்விற்கான தரவு சேகரித்தலுடன் தொடர்பாக செயற்பட ஒரு மூத்த அதிகாரியை நியமிக்கும் வண்ணம் கோரப்பட்டது. தொடர்ச்சியாக தரவு சேகரித்தல் செயற்பாட்டை செய்யவும், சரியான நேரத்தில் பூரணப்படுத்தப்பட்ட தரவு சேகரிக்கும் மாதிரியை NASTEC இற்கு சமா்ப்பிக்கும் பொறுப்புடையவர்களாகவும் இந்த அதிகாரிகள் செயற்படுவர். எமது வேண்டுகோளுக்கு பதிலளிக்கும் வகையில் அநேகமான நிறுவனங்கள் ஒரு இணைப்பதிகாரியை பிரேரித்து இற்கு அறியத்தந்தன. இணைப்பதிகாரிகளுக்கு தரவு சேகரித்தல் மாதிரியின் உள்ளடக்கங்களையும், மீளாய்வின் ஆழத்தையும் விளக்க ஒரு கூட்டத்தை ஆண்டிறுதியில் ஒழுங்கு செய்ய முயற்சிக்கப்படுகிறது.

## -இளம் விஞ்ஞானிகள் கருத்துமன்ற செயற்பாடுகள்-

♣ **சுய விருத்திக்கான வழிகாட்டல்கள் பற்றிய தொழிற்பட்டறைகள்**

(2011 ஆனி 24ம் திகதி, விமலசுரேந்திர அரங்கம், பொறியியலாளர்கள் சங்கம், இலங்கை)



*செல்வி. பைகி ஜக்கின்ஸ் தன்னுடைய கருத்தை பகிர்ந்து கொள்ளல்*

இந்த தொழிற்பட்டறை NASTEC இன் இளம் விஞ்ஞானிகள் கருத்து மன்றத்தின் ஒரு முன்னோடியாக இருந்தது. கருத்தாளர் செல்வி. பைகி ஜக்கின்ஸ் (Paige Jackins)> திறமைகளை வளர்ப்பதில் சிறப்புத் தேர்ச்சி உடையவர்,ருளு மாநில துறைக்காக வேலை செய்பவர், இலங்கையிலுள்ள அமெரிக்க மையத்துடன் இணைப்புடையவர். கிட்டத்தட்ட 100 இளம்

விஞ்ஞானிகள் கருத்து தொடரிற்கு வந்திருந்தனர். NASTEC ஆனது செல்வி ஜக்கின்ஸை வயம்ப பல்கலைக்கழகத்தினூடாகவே அழைத்தது, ஏனெனில் அங்கே தான் அவர் பட்டதாரி மாணவர்களுக்கான திறமை வளர்ப்பில் தற்காலிக ஆலோசனை வழங்கி கொண்டிருந்தார்.



*பங்குபற்றியோரில் ஒரு பகுதியினர்*

தொழிற்பட்டறையானது இளம் விஞ்ஞானிகள் தமது சுய விருத்தியை மதிப்பீடு செய்யும் நோக்குடனேயே ஒழுங்கு செய்யப்பட்டது. இது பின்வரும் தலைப்புகளைக் கலந்தாலோசித்தது ஒரு சுய விருத்தி திட்டத்தை உருவாக்கல், ஒருவரின் சொந்த பலங்களையும் முன்னேற்ற வேண்டிய இடங்களையும் ஆராய்தல், நீண்டகாலப் பார்வையை இனங்காணல், ஆரோக்கியம், குடும்பம், நண்பர்கள், சுயவிருத்திக்கிடையில் ஒரு சமநிலையை பேணும் வேளையில் வெற்றி இலக்குகளை அடைவதற்காக கொள்கைகளை உருவாக்கல். தொழிற்பட்டறையின் இரண்டாவது அமர்வில் பங்குபற்றியோர் குழுக்களாக்கப்பட்டு, ஒவ்வொரு குழுவிற்கும் ஒரு பொது வழிகாட்டல் தொகுதி உருவாக்குமாறு கேட்கப்பட்டனர். இறுதியில் இந்த அனைத்து குழுக்களினதும் வழிகாட்டல்கள் பார்வையாளர்களுடன் பகிரப்பட்டது. அவற்றிற்கு செல்வி ஜக்கின்ஸ் விமர்சனம் செய்தார்.

♣ **திட்ட முகாமைத்துவ அடிப்படை பற்றிய தொழிற்பட்டறை**

(2011 ஐப்பசி 28ம் திகதி ஹெக்டர் கொபேகடுவ விவசாய ஆராய்ச்சி பயிற்சி நிறுவனத்திலுள்ள மகிந்த சில்வா அரங்கில்)

இது YSF இன் இன்னுமொரு முன்னோடி நடவடிக்கை. தொழிற்பட்டறையானது பேராசிரியர் உதித் மு. ஜயசிங்க முதலிகேயினால் ((விவசாய பொருளியல் வர்த்தகத்தில் பேராசிரியர்) விவசாய பயிரிடல் முகாமைத்துவ பீடம், வயம்ப பல்கலைக்கழகம், இலங்கை) நடாத்தப்பட்டது.

திட்ட செயலாற்றல் முகாமைத்துவம், திட்ட அட்டவணை முகாமைத்துவம், வரவு செலவு திட்ட முகாமைத்துவம், தர முகாமைத்துவம், திட்ட அணிமுகாமைத்துவம், தகவல் முகாமைத்துவம், திட்ட அபாய முகாமைத்துவம், திட்டபங்குதாரர் முகாமைத்துவம், திட்ட உள்ளடக்க முகாமைத்துவம் உள்ளடங்கலான திட்ட முகாமைத்துவத்தின் அம்சங்கள் இங்கு கலந்துரையாடப்பட்டது.



*பேராசிரியர் உதித் ஜயசிங்க தமது விரிவுரையை வழங்குகிறார்.*



ப்கலைக்கழகங்கள் ஆராய்ச்சி அபிவிருத்தி றுவனங்களிலிருந்து கிட்டத்தட்ட 100 இளம் விஞ்ஞானிகள் நத்துத் தொடரில் பங்கேற்றனர்.

*ஒரு பகுதி பார்வையாளர்கள்*

**YSF விருதுகள்- 2010**

YSF விருதுகள் இளம் விஞ்ஞானிகளை ஊக்குவிப்பதற்காகவும், அவர்களின் சாதனைகளை அடையாளங் காண்பதற்காகவும் வருடாந்தம் வழங்கப்படுகிறது. அவை இரண்டு பிரிவின் கீழ் வழங்கப்படுகின்றன. விஞ்ஞான ஆராய்ச்சியின் உன்னத சாதனைக்காக, விஞ்ஞான முன்னேற்றம் மற்றும் பிரபல்யத்தில் உன்னத சாதனைக்காக. YSF அங்கத்தவர்களிடையே விண்ணப்பங்கள் கோரப்பட்டு NASTEC ஆல் நியமிக்கப்பட்ட ஒரு மூத்த விஞ்ஞானிகள் குழு 2006 – 2010 வரையான அவர்களின் செயற்பாட்டை மதிப்பீடு செய்தது. பின்வரும் அங்கத்தவர்கள் விருதுகளை வென்றனர்.

- விஞ்ஞான ஆராய்ச்சியில் உன்னத சாதனைக்கான YSF விருது

இந்தப் பிரிவில் 4 YSF அங்கத்தவர்கள் விண்ணப்பித்தனர் மதிப்பீட்டில் இரு விண்ணப்பதாரிகள் விஞ்ஞான ஆராய்ச்சி பிரிவில் சமஅளவில் பாராட்டுதலுக்குரியவர்களாகக் கண்டுபிடிக்கப்பட்டனர். அதன்படி ஆணைக்குழுவானது பின்வரும் இரு விஞ்ஞானிகளுக்கு இப்பிரிவின் கீழ் இரு விருதுகளை வழங்க தீர்மானித்தது.

1. கலாநிதி றூபிகா S. ராஜகருணா, விலங்கியல் துறை, விஞ்ஞான பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்



2. பேராசிரியர். உதித் ஜயசிங்க, விவசாய வர்த்தக முகாமைத்துவ துறை, விவசாய பயிரிடல் முகாமைத்துவ பீடம், வயம்ப பல்கலைக்கழகம், இலங்கை



- 

இப்பிரிவின் கீழ் இரு YSF அங்கத்தவர்கள் மட்டுமே விண்ணப்பித்திருந்தனர். அவர்களில் ஒருவர் கூட அழைப்படைக் கோட்பாட்டின் தரத்தை எட்ட முடியவில்லை என்பதை மதிப்பீட்டுக் குழு அவதானித்தது. ஆகவே 2010 இற்கான இந்த விருது வழங்குவதில்லை என தீர்மானிக்கப்பட்டது.

## - கருத்துமன்ற பணிப்பாளர்களின் (FOD) ஆலோசனை-

தேசிய S&T கொள்கைகளை கண்காணித்தல், அடுத்த ஈராண்டுக்கொருமுறை நிகழும் விஞ்ஞான தொழில்நுட்ப மாநாடு (BICOST - VII) என்பன பற்றி கலந்துரையாடுவதற்கான கருத்து மன்ற பணிப்பாளர்களின் கூட்டம் ஆனி 23 இல் நிகழ்ந்தது.

S&T கொள்கை விரிவாக்கலை கண்காணித்தலானது S&T நிறுவனங்களின் காலாண்டு முன்னேற்ற அறிக்கையுடன் செய்வதாக தீர்மானிக்கப்பட்டது. முன்னேற்ற வீதமானது தேவையான நேரத்தில் கிடைக்கக்ககூடியதாகவுள்ள மனித, நிதி வளங்களில் தங்கியுள்ளதென்பது முக்கியத்துவப்படுத்தப்பட்டது. NASTEC இற்கும் அவர்களுடைய நிறுவனங்களுக்கும் இடையிலான செயற்பாடுகளை ஒன்றிணைக்க இணைப்பதிகாரிகளை நியமிக்க பணிப்பாளர்கள் சம்மதித்தனர்.

NASTEC ஆனது ஆராய்ச்சி முடிவுகளை வர்த்தகமயமாக்கல் என்பதை அடுத்த ஈராண்டுக்கொருமுறை நிகழும் விஞ்ஞான தொழில்நுட்ப மாநாட்டின் (BISCOT - VII) முக்கிய கருவாக கொள்வதாக பிரேரணை செய்தது. கருத்துத் தொடரானது வர்த்தகமயமாக்கல் தொடர்பான வேறுபட்ட அம்சங்களுடன் சம்பந்தப்பட்ட பலதரப்பட்ட கருக்களைப் பிரேரித்தது. அவையாவன நிறுவனங்களின் ஆராய்ச்சித் தேவைகளை இணங்காணல், நிறுவனங்களின் சுருனு சேவைகள் தேசிய பொருளாதாரத்தில் ஏற்படுத்தும் விளைவு, தரமான பொருட்கள், சேவைகளுக்கான தேசிய தர உட்கட்டமைப்பு. மூலக்கரு தொடர்பான கருத்துக்கள் தடைகளை இனங்காண்பதற்காக மாநாட்டிற்கு முன்னர் ஒரு சூழ்நிலை பகுப்பாய்வு செய்யப்பட வேண்டுமென பிரேரிக்கப்பட்டது.

மேற்கூறியவற்றுடன் S&T நிறுவனங்கள் முகங் கொடுக்கும்பிரதான பிரச்சனைகளாக உதாரணத்திற்கு, சிறந்த பயிற்சியுடைய மனித வள பற்றாக்குறை, நிதி வள குறைபாடு, விசேட சலுகை, வசதி பற்றாக்குறை காரணமாக சிறந்த அறிவு, பயிற்சியுள்ளவர்கள் வெளிநாடுகளுக்கு இடம்பெயர்தல் போன்றனவும் இக்கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டன.

## -பிற செயற்பாடுகள்-

### NASTEC இற்கான நியமனங்களிற்கான புதிய திட்டம்

NASTEC இலுள்ள பதவி வெற்றிடங்களிற்கான புதிய நியமன திட்டங்களை தயார் செய்தல், நிர்வாக சேவைகள் துறையின் 30ம் இலக்க சுற்றுநிருபத்திற்கு அமைவான ஒரு அடிப்படை செயலாகும். 2008 வரை இந்த திட்டங்களின் தயாரிப்பு முயற்சிக்கப்பட்டுக் கொண்டிருந்தது அத்துடன் திட்டம் பற்றிய பலதரப்பட்ட வரைபுகள் தயாரிக்கப்பட்டு அவை சம்பளங்களுடனும் விசேடமாக தேர்வு செய்யப்பட்ட ஆணைக்குழுவுடனும் கலந்தாலோசிக்கப்பட்டன. இந்த நீளமான செயன்முறையின் முடிவில் இந்த திட்டங்கள் 2011 புரட்டாதி அங்கீகரிக்கப்பட்டது தற்போதுள்ள பணியாளரை புதிய திட்டங்களிற்குள் உள்வாங்கும் செயற்பாடு வருட இறுதிவரை முயற்சியிலேயே உள்ளது.

### பொது நிறுவனங்களுக்கான ஆணைக்குழுவிற்கு (COPE) அறிக்கைப்படுத்தல்

NASTEC ஆனது 2011 பங்குனி 22 இல் பாராளுமன்றத்தில் COPE இற்கு கையளிக்க வேண்டப்பட்டுள்ளது. கேட்கப்பட்ட ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு மாசி மாதத்தில் COPE இற்கு கையளிக்கப்பட்டது. NASTEC இன் அத்தியாவசிய நடவடிக்கைகள் பற்றி COPE கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது. தேசிய S&T கொள்கையும் கலந்துரையாடலின் ஒரு முக்கிய அங்கமாக இருந்தது. இந்தக் கூட்டத்தில் NASTEC ஆனது தனது செயற்பாடுகளை வினைத்திறனாக செயற்படுத்த பணியாளர் பற்றாக்குறையாக இருப்பதை முக்கியப்படுத்தியது.

**ஜப்பான் விஞ்ஞான சங்க பிரதிநிதிகளின் இலங்கை வருகை**



ஜப்பான் விஞ்ஞான சங்க (SCJ) பிரதிநிதிகளாக இருந்த ஜப்பானிய அதிகாரபூர்வ பிரதிநிதிகளைக் கொண்ட குழு ஒன்று 2011 சித்திரை 26ம் திகதி NASTEC இற்கு வருகை தந்தது. அவர்கள் பேராசிரியர் இச்சிரோ கனசவ ,தலைவர் SCJ; பேராசிரியர் சின்டி சிராத ஒரு ஜப்பான் அமைச்சரவை பதில் பிரதிநிதி ஆவர். ஆசிய விஞ்ஞான சங்கத்தை (SCA) இலங்கையில் விருத்தி செய்வதே இவ்வருகையின் நோக்கமாகும். அவர்கள் NASTEC ஐ SCA இன் ஒரு அங்கத்தவராக இணைய அழைப்பு விடுத்தனர். அத்துடன் அவர்கள் NASTEC ஐ ஆடி 4-6 வரை மொங்கோலியாவில் நடைபெறும் 11வது SCA மாநாட்டில் பார்வையாளராக கலந்துகொள்ள அழைப்பு விடுத்தனர். இதன் மூலம் NASTEC சங்கத்தில் இணைவது இலங்கைக்கு நன்மை பயக்குமா என தீர்மானிக்க முடியும். இருப்பினும் தவிர்க்க முடியாத காரணங்களால் நடந்த கூட்டத்தில் NASTEC கலந்துகொள்ளவில்லை.

அறிவு பரிமாறல், ஆராய்ச்சி ஒன்றிணைப்பினை ஆரம்பிக்கும் ஒரு தளத்தை வழங்கல் விஞ்ஞானிகளிடையே இடைத்தொடர்பை ஏற்படுத்தல் என்பனவே SCA மூலம் ஒரு அங்கத்துவ நாடு பெற்றுக்கொள்ளும் பிரதான நன்மைகளாகும். ஜப்பான், சீனா, இந்தியா, மலேசியா போன்ற நாடுகள் முன்னரே அங்கத்தவர்களாக இருக்கின்றன.

மீண்டும் 2011 புரட்டாதி 9ம் திகதி SCJ அங்கத்தவர்கள் இருவர் இலங்கையில் வேறு ஒரு நோக்குடன் NASTEC இற்கு வருகை தந்தனர். இந்தக் கட்டத்தில் NASTECஆனது கொள்கைப் பகுப்பாய்வு விடயத்தில் இலங்கையில் ஆற்றல் விருத்திக்காக யப்பானிடமிருந்து தேவையான உதவிகள் கிடைக்கும் சாத்தியங்கள் பற்றி கலந்துரையாடியது. அங்கத்தவர்கள் அடிப்படையான சாத்தியங்களை யப்பானில் இனங்காண சம்மதித்தனர்.

**தொழில்நுட்ப பெயர்ப்பட்டியல்**

NASTEC தொழில்நுட்ப ஆராய்ச்சி அமைச்சினால் பொருட்கள், செயற்பாடுகள், சேவைகளை வலுவுள்ள வர்த்தகர்களுக்கு அறிமுகப்படுத்த, சந்தைப்படுத்த ஒழுங்கு செய்யப்பட்ட தொழில்நுட்ப சந்தைப்படுத்தல் கண்காட்சியில் விநியோகிப்பதற்காக தொழில்நுட்ப பெயர்ப்பட்டியல் ஒன்றை தொகுத்தது. இந்த கண்காட்சி 2011 ஐப்பசி 24, 25ம் திகதிகளில் BMICH இல் இடம்பெற்றது.

இந்த பெயர்ப்பட்டியல் தொழில்நுட்ப ஆராய்ச்சி அமைச்சிற்குட்பட்டு தொழிற்படும் ஆராய்ச்சி நிறுவனங்களால் உருவாக்கப்பட்ட பொருட்கள், செயற்பாடுகள், இயந்திரங்கள், உபகரணங்கள் பற்றிய தகவல்களை உள்ளடக்கியது. அத்துடன் இப்பெயர்ப்பட்டியல் இந்த நிறுவனங்களால் வழங்கப்படும் வேறு வகையான சேவைகள் பற்றிய விபரங்களையும் தருகிறது.

**"தெயாத கிருல (Deyata Kirula)"கண்காட்சியில் பங்களிப்பு**

NASTEC இற்கு 2011 மாசி 4 – 10 வரை நடைபெற்ற "தெயாத கிருல" கண்காட்சியில் பங்குபெற்ற அழைப்புவிடுக்கப்பட்டது. NASTEC தேசிய S & T கொள்கையின் கொள்கை ஈட்டங்களை உள்ளடக்கிய சுவரொட்டி ஒன்றை தயாரித்தது, இது விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சின் பிரதான காட்சியறையில் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தது.

## சர்வதேச தொடர்புகள்

- ♣ பல்துறை தொழில்நுட்ப, பொருளியல் கூட்டுஸ்தாபனத்திற்கான வங்காள விரிகுடா முன்னோடிகள் (BIMSTEC)




**BIMSTEC தொழில்நுட்ப மாற்றீட்டு வசதி:**

BIMSTEC தொழில்நுட்ப மாற்றீட்டு வசதியை விரிவாக்கும் வல்லுனர்களின் இரண்டாவது குழுக்கூட்டமொன்று கொழும்பு, சினமன் லேக்சைடில் (Cinnamon Lakeside) 2011 வைகாசி 9 – 10 வரையான திகதிகளில் நடைபெற்றது. வெளிவிவகார அமைச்சு, தொழில்நுட்ப ஆராய்ச்சி அமைச்சுடன் இணைந்து இந்த நிகழ்வை ஒழுங்கு செய்த வேளையில் NASTEC வல்லுனர்களை வழங்கியது. வங்காளதேசம், பூட்டான், இந்தியா, மியன்மார், நேபாளம், தாய்லாந்து, இலங்கை போன்ற நாடுகளிலிருந்து அதிகாரபூர்வ பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். யுேளுவுநுஊ தலைவரான பேராசிரியர் நாளினி ரட்ணசிரி கூட்டத்திற்கு தலைமை தாங்கினார்.

இலங்கை இந்தக் கூட்டத்தில் திருத்தப்பட்ட கருத்துப் பத்திரத்தை முன்வைத்தது. அது கலந்தாலோசிக்கப்பட்டு முடிவு செய்யப்பட்டது. அதிகாரபூர்வ பிரதிநிதிகள் NERD நிலையத்தில் பிரதான தொழில்நுட்ப மாற்றீட்டு வசதியை விருத்தி செய்வதற்கு இணக்கம் தெரிவித்தனர். இவ்வசதியின் பிரதான நோக்கங்களாவன:

1. BIMSTEC அங்கத்துவ நாடுகளின் தொழில்நுட்ப மையங்களை தொழில்நுட்ப மாற்றீட்டின் ஊடாக முன்னேற்றுதல்.
2. அறிவுசார் தொழில்நுட்பங்களை அவற்றை மாற்றீடு செய்தலும்

வசதியின் நிதி தொழிற்பாடு, செயற்படுத்தல் முறைமை, சட்ட ஒழுங்கு போன்றன கலந்தாலோசிக்கப்பட்டது. சந்தா கட்டணங்கள், அங்கத்துவ நாடுகளிலிருந்தான நிதியங்கள், நன்கொடை முகவர்கள் ஆகியோரே வசதியின் பிரதான நிதி மூலங்களாக அமைவர். இந்த வசதியானது அங்கத்துவ நாடுகளின் மையப் புள்ளிகளினூடாக செயற்படுத்தப்படுவதோடு பிரதான மையம் இலங்கையில் இருக்கும்.

- ♣ ஒழுங்குபடுத்தப்படாத அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் விஞ்ஞான, தொழில்நுட்பத்திற்கான மையம் (NAM S & T மையம்)

1933இல் கிடைத்த அமைச்சரவை அங்கீகாரத்தின் அடிப்படையில், இலங்கை 1995இல் NAM S & T மையத்தில் இணைந்தது. விஞ்ஞான தொழில்நுட்பவியல் அமைச்சு, வெளிவிவகார அமைச்சின் உடன்பாட்டுடன் தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப ஆணைக்குழுவை (NASTEC) இலங்கையின் NAM S & T மையத்திற்கான மையப்புள்ளியாக 2001இல் நியமித்தது.

NAM S & T மைய செயற்பாடுகள் விவசாயம், இலத்திரனியல் கைத்தொழில் போன்றவற்றில் உள்ள அதிநவீன தொழில்நுட்பங்களை இலங்கை விஞ்ஞானிகள் தெரிந்து கொள்வதற்கான தனித்துவமான சந்தர்ப்பத்தை வழங்கியது. அத்துடன் உள்நாட்டு விஞ்ஞானிகளுக்கு சர்வதேச விஞ்ஞானிகளும் இடைத்தொடர்பை ஏற்படுத்த சந்தர்ப்பங்கள் கிடைக்கப்பெற்றன. இலங்கை விஞ்ஞானிகள் NAM S & T மைய செயற்பாடுகளில் பங்குபற்ற வெளிநாடுகளிற்கு பயணம் செய்கின்றனர். இதை பல்வேறு நாடுகளிலுள்ள மையப்புள்ளிகள் இணைந்து பொறுப்பேற்பதால் விமான பயண கட்டணம், விடுதி தங்குமிடம் இரண்டும் வழங்கப்பட்ட போதும் குறைந்த செலவில் நடைபெறுகிறது. NAM S

& T மையத்தால் 2011இல் இலங்கைக்கு மிக நன்மையாக அமைந்த 3 செயற்பாடுகளின் பட்டியல் கீழே தரப்பட்டுள்ளது.

1. ரெல்ரன் ஈரானில் தை 5 – 7 வரை நிகழ்ந்த விஞ்ஞான தொழில்நுட்பவியல், நிலைத்து நிற்கும் அபிவிருத்தி தொடர்பான சர்வதேச கருத்து தொடரானது NASTEC இன் தலைவர் பேராசிரியர் நாளினி ரட்ணசிரியால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டது.
2. NERD மையத்தின் பிரதான ஆராய்ச்சி பொறியியலாளரான பொறியியலாளர் மு. வு. ஜயசிங்க (2011 வைகாசி 4-14 வரை இந்தியாவின் மும்பை நகரில் நிகழ்ந்த) அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளிலுள்ள சக்தி சிறப்பு பணியாளர்களிற்கான, சக்திக் கணக்காய்வுச் சர்வதேச பயிற்சிப் பாசறையில் பங்குபற்றினார்.
3. காலநிலை அவதானிப்பு துறையை சேர்ந்த இலத்திரனியல் பொறியியலாளர் திரு. நுவான் குமாரசிங்க 2011 ஐப்பசி 12-14 வரை காத்மண்டு, நேபாளத்தில் நிகழ்ந்த மின்னல் பாதுகாப்பில் நிகழ்ந்த சர்வதேச கருத்தரங்கில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தினர்.



***விஞ்ஞான தொழில்நுட்பவியல் கொள்கைகளுக்கான சர்வதேச கருத்துதொடரில் பங்குபற்றியவர்களிடையே இலங் கைக்கான பிரதிநிதி, பேராசிரியர் நாளினி ரட்ணசிரி (முதல் வரிசையில் மூன்றாவது நபர்)***

## எமது பணியாளர்

### ♣ நிறைவேற்று அதிகாரமுடைய பணியாளர்

**பதில் பணிப்பாளர்**
**கலாநிதி** முதித்த லியனகெதர
B.Sc., M. Phil (பேராதனை),
Ph. D (Seoul).

**விஞ்ஞான திட்ட முகாமையாளர்**
செல்வி. ஆஷா பிட்டதெனிய
B.Sc., M.Sc. (பேராதனை)

**கணக்காளர்**
திருமதி. பு. ஊ. மு. பீரிஸ்
B. Com (ஜெயவர்த்தனபுர)

**நிறைவேற்று அதிகாரமுடைய செயலாளர்**
திரு. றுக்மன் கூரே புளத்சிங்கள

### ♣ உதவி பணியாளர்

**திட்ட உதவியாளர்கள்**
கணனி உபயோகம்
திருமதி. L. A. L. N. லியனராச்சி
B.Sc. (சப்பிரகமுவா)

நிதி
திரு. சு. ஆ. துசித்த ரத்னாயக்க M. A. A. T

**தனிப்பட்ட உதவியாளர்கள்**
திருமதி. நில்மினி பெரேரா
செல்வி. சயூமி விஜயசிங்க
(ஒப்பந்த அடிப்படையில்)

**வாகன ஓட்டுனர்கள்**
திரு. H. A. அனில் குமார ஹெட்டியாராச்சி
திரு. I. G. ஜயசாந்த பிரபாத்
திரு. இரந்த பிரதீப்

**ஆராய்ச்சி உதவியாளர்கள்**
செல்வி. தனஞ்சலி பெரேரா
B.Sc. (பேராதனை)

செல்வி. அமலி ஜயதிலக்க
B.Sc. (சப்பிரகமுவா)

**வரவேற்பாளரும் தொலைபேசி கட்டுப்பட்டாளரும்**
செல்வி. தக்ஷினி கருணாதிலக

## பணியாளர் செய்தி

1. 2011 காலப்பகுதியில் NASTEC 2 ஆராய்ச்சி உதவியாளர்களை (தற்காலிக பதவிகள்) சேர்த்துக் கொண்டது. செல்வி. தனஞ்சலி பெரேரா (பேராதனைப் பல்கலைக்கழகம்), செல்வி அமலி ஜயதிலக்க (சப்பிரகமுவா பல்கலைக்கழகம்).

2. NASTEC, தமது தொழிலாளிகளை பயிற்சி வேலைத்திட்டங்கள், கருத்தரங்குகள் கருத்து பட்டறைகளுக்கு வழிநடத்துவதன் மூலம் அவர்கள் அறிவை வளர்ப்பதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுத்தது.

பயிற்சி வேலைத்திட்டங்கள்/தொழிற்பட்டறைகள்/கருத்தரங்குகள்

- NASTEC வரவேற்பாளரான செல்வி. தக்ஷினி கருணாதிலக்க, தொழிலாளர் கற்கைகளுக்கான தேசிய நிறுவனத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டு தை 31இல் நிகழ்ந்த தனியார் ஆளுமை தொடர்புகள், பொது தொடர்புகளுடன் சம்பந்தப்பட்ட தொழிற்பட்டறையில் கலந்து கொண்டார்.

- விஞ்ஞான செயற்திட்ட முகாமையாளரான செல்வி. ஆஷா பிட்டதெனிய தொழிற்கல்வி ஒருங்கிணைப்பு நிறுவனத்தினால் பங்குனி 16, 18ம் திகதிகளில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த முகாமையாளர்கள், ஆராய்ச்சியாளர்களுக்குகான அடிப்படை புள்ளிவிபரவியல், தரவுப் பகுப்பாய்வு பற்றிய தொழிற்பட்டறையில் கலந்து கொண்டார்.

- அலுவலக உதவியாளரான திருமதி. நிஷாந்த பியதாஸ நவீன தொழில்நுட்பங்களுக்கான ஆதர் ஊ. கிளார்க்கின் நிறுவனத்தால் ஆவணி 13ம், 14ம் திகதிகளில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த தொழில் நிபுணர்களுக்கான கணனி வன்பொருளில் அத்தியாவசியமானவை பற்றிய தொழிற்பட்டறையில் கலந்து கொண்டார்.

- தனிப்பட்ட உதவியாளரான திருமதி. நில்மினி பெரேராவும், செயற்திட்ட உதவியாளரான திரு. துஷித்த ரத்னாயக்கவும் இலங்கை நிதி நிறுவனம் ஐப்பசி 4ம் திகதி ஒழுங்கு செய்திருந்த தொழில் நிபுணத்துவத்திற்கான தொழிற்பட்டறையில் பங்குபற்றுவதற்காக தேர்வு செய்யப்பட்டனர்.

- திரு. அனில் குமார, திரு. ஐ. பு. து.பிரபாத், திரு. இரந்த பிரதீப் ஆகியோர் ஆற்றல் விருத்தி நிதியம் நிகழ்த்திய பாதுகாப்பான வண்டி ஓட்டுதல் தொழிற்பட்டறையில் பங்குபற்றினர்.

- கலாநிதி முதித்த லியனகெதர, இலங்கை நிதிய நிறுவனத்தால் மார்கழி 5ம் திகதி ஒழுங்கு செய்யப்பட்டிருந்த வினைத்திறனான கூட்டுறவு திட்டமிடல் தொழிற்பட்டறையில் கலந்து கொண்டார்.

- செல்வி. தக்ஷினி கருணாதிலக்க ஆற்றல்விருத்தி நிதியத்தால் மார்கழி 8ம் திகதி ஒழுங்கு செய்யப்பட்டிருந்த விருத்தி அடைந்துவரும் முகாமைத்துவ உதவியாளர்கள் என்ற தொழிற்பட்டறையில் பங்குபற்றினார்.

தொழிற்பட்டறைகள்/கருத்தரங்குகள்

- செல்வி. பிட்டதெனிய சூழலியல் அமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த காலநிலை மாற்ற இசைவாக்கத்திற்கான தொழில்நுட்பங்களை இனங்காணலும் முன்னிலைப்படுத்தலும் பற்றிய கருத்தரங்கில் பங்குபற்றினார்.

- செல்வி ஆஷா பிட்டதெனிய NSF ஆல் கார்த்திகை 2, 3ம் திகதிகளில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த தேசிய கண்டுபிடிப்பு தொகுதிகள், அவற்றின் செயற்பாட்டுக் கொள்கைகள், முகாமைத்துவ முறைகள் பற்றிய தொழிற்பட்டறையில் பங்குபற்றுவதற்காக பரிந்துரைக்கப்பட்டார்.

- நிறைவேற்று அதிகாரமுடைய செயலாளர் திரு. றுக்மன் கூரேயும், ஆஷா பிட்டதெனியவும் இலங்கை நிதி நிறுவனத்தால் ஆடி 20, 29 தினங்களில் நடாத்தப்பட்ட முடிவெடுக்கும் செயற்பாடுகளில் பெண்களின் பங்களிப்பை முன்னேற்றுவதற்கான தொழிற்பட்டறையில் பங்குபற்றினர்.

## நிரந்தர சொத்துக்களின் கொள்வனவுகள்

1. NASTEC இன் நீண்டகால தொடர்ச்சியான வேண்டுகோளிற்கிணங்க, NASTEC 15 இருக்கைகள் கொண்ட புதிய வாகனமான வான் ஒன்றை குத்தகை அடிப்படையில் அரசிடமிருந்து பெற்றுக்கொண்டது.

2. பின்வரும் நிலையான சொத்துக்களை 2011 காலப்பகுதியில் வாங்கியது

| | |
|---|---|
| ஒளிவிடு சேமிப்பான்கள் | தொலைபேசி |
| நிழற்பிரதி இயந்திரம் | பல்துறை பெரிதாக்கி |
| புத்தக இறாக்கைகள் | மைக்ரோசொப்ட் ஒபிஸ் |
| வளிச்சீராக்கிகள் | மடிக்கணனிகள் |
| UPS | |

# நிதி அறிக்கைகள்

**தேசிய விஞ்ஞான தொழில்நுட்பவியல் ஆணைக்குழு**

**2011 மார்கழி 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை**

| | பட்டியல்கள் | 2011 ரூ. | 2011 ரூ. | 2010 ரூ. | 2010 ரூ. |
|---|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | | | |
| **நிலையான சொத்துகள்** | | | | | |
| சொத்து, தாவரம், உபகரணம் | 1 | 12, 050, 084 | | 4, 267, 020 | |
| | | | **12, 050, 084** | | **4, 267, 020** |
| | | | | | |
| **நடைமுறை சொத்துக்கள்** | | | | | |
| பதிவுகள்/இருப்புகள் | 2 | 149, 907 | | 149, 484 | |
| வியாபாரக் கடன்கொடுநர் | 3 | 12, 000 | | 12, 000 | |
| முற்பணக் கொடுப்பனவுகள் | 4 | 421, 355 | | 418, 459 | |
| காசும் காசு இருப்பனவுகளும் | 5 | 242, 574 | | 897, 548 | |
| ஊழியர் கடன் | 6 | 619, 829 | **1, 445, 665** | 471, 423 | **1, 948, 914** |
| | | | | | |
| **மொத்த சொத்துக்கள்** | | | **13, 495, 749** | | **6, 215, 934** |
| | | | | | |
| **பொறுப்புக்கள்** | | | | | |
| **நடைமுறை பொறுப்புக்கள்** | | | | | |
| செலவீனங்கள் | 7 | 168, 258 | | 163, 828 | |
| | | | **168, 258** | | **163, 828** |
| | | | | | |
| **நிலையான பொறுப்புக்கள்** | | | | | |
| பிற்போடப்பட்ட வருமானம் | | 9, 503, 753 | | 439, 500 | |
| ஊழியர் பணிக்கொடை ஏற்பாடு | 8 | 1, 399, 562 | **10, 903, 315** | 1, 131, 155 | **1, 570, 655** |
| | | | | | |
| **மொத்த பொறுப்புக்கள்** | | | **11, 071, 573** | | **1, 734, 483** |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **மொத்த நிகர சொத்துக்கள்** | | | **2, 424, 176** | | **4, 481, 451** |
| **நிகர சொத்துக்கள்/மூலதனம்** | | | | | |
| திரட்டிய நிதி | | 6, 694, 282 | | 7, 943, 493 | |
| ஒதுக்கீடுகள் | | (4, 270, 106) | | (3, 462, 042) | |
| **மொத்த நிகர சொத்துக்கள்/மூலதனம்** | | | **2, 424, 176** | | **4, 481, 451** |

**தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப ஆணைக்குழு**
**2011 மார்கழி 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டு அறிக்கை**

| **தொழிற்பாட்டு வருமானம்** | | 2011 ரூ. | 2010 ரூ. |
|---|---|---|---|
| தொடர்ந்து கிடைக்கும் நிதியம் | | 12, 662, 000 | 13, 325, 000 |
| மூலதன மானியம்-ஒரு சேவைகள் | | 876, 600 | 3, 673, 000 |
| அரச நிதியங்களில் அருவ சொத்துக்களிற்கான பருவழித்தல்- பெறுமான தேய்வு | | 1, 380, 957 | 1, 555, 742 |
| வருமானம் | 9 | 161, 623 | 27, 202 |
| | | **15, 081, 180** | **18, 580, 944** |
| **தொழிற்பாட்டு செலவுகள்** | | | |
| தனிப்பட்ட பற்றுக்கள் | 10 | 6, 887, 957 | 6, 531, 511 |
| போக்குவரத்து | 11 | 218, 576 | 127, 568 |
| விநியோகம், நுகர்வுகள் | 12 | 251, 271 | 228, 082 |
| பராமரிப்பு | 13 | 574, 130 | 352, 037 |
| ஒப்பந்த சேவைகள் | 14 | 4, 125, 321 | 4, 720, 336 |
| மாற்றீடுகள் | 15 | 1, 380, 927 | 922, 067 |
| S & T சேவைகள் | 16 | 1, 080, 676 | 3, 371, 986 |
| பெறுமான தேய்வு, அருவ சொத்துக்களிற்கான பருவழித்தல் செலவுகள் | 1 | 1, 380, 957 | 1, 555, 742 |
| மொத்த தொழிற்பாட்டு செலவுகள் | | **15, 899, 815** | **17, 809, 329** |

| | | |
|---|---|---|
| செயற்பாட்டு தொழிற்பாடுகளினால் மேலதிக / துண்டுவிழும் தொகை | 818,635 | 771,615 |
| **நிதிச் செலவு** | | |
| நிலையம் மற்றும் உபகரணங்களாகிய சொத்துக்களின் | | |
| விற்பனை மூலம் பெறப்பட்டது | 10,570 | 4,929 |
| செயற்பாடற்ற வரிகளின் மொத்தம் (செலவுகள்) | - | - |
| இந்த வகைக்கான நிகர மேலதிகம் /துண்டு விழும் தொகை | 808,065 | 776,544 |

## கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

தலைவர்

தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப ஆணைக்குழு

தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப ஆணைக்குழுவின் பொருளாதாரக் கொள்கை இல 38/1971 இன் 14(2)(c) பிரிவின் படியான 31 டிசம்பர் 2011 உடன் முடிவடைந்த வருடத்திற்கான கணக்காய்வாளர் நாயகத்தின் நிதித் தகவல்களின் மீதான அறிக்கை

-------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

31 டிசம்பர் 2011 உடன் முடிவடைந்த வருடத்திற்கான விஞ்ஞான தொழில்நுட்ப ஆணைக்குழுவின் பொருளாதாரத் தகவல்கள் மீதான கணக்காய்வு ஆனது 31 டிசம்பர் 2011 இன்படியான ஐந்தொகை, வருமான அறிக்கைகள், முடிவடைந்த வருடத்திற்கான பண ஓட்ட அறிக்கை, பிரதானமான கணக்கியல் கொள்கைகளின் சுருக்கம், ஏனைய விபரிக்கப்பட்ட தகவல்கள் என்பவற்றைக் கொண்டது. இவை எனது வழிகாட்டல்களின் கீழ்: 1994ம் சட்ட இல 11 விஞ்ஞான தொழில்நுட்ப விருத்தியின் பிரிவு 40(3) இனதும் 1971ம் ஆண்டின் பொருளாதார சட்ட இல் 38 இன் 13(13ம்) பிரிவின் படியுமான இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசியல் யாப்பில் 154(1) ஆம் சட்டத்தின் தருகைகளுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்டதாகும்.

இந்த அறிக்கையில் காட்டப்பட்டுள்ள பொருளாதாரச் சட்டத்தின் 14(2)(c) பிரிவிற்கேற்ப எனது விமர்சனங்களும் அவதானங்களும் ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டும். பொருளாதாரச் சட்டத்தின் 13(7)(a) பிரிவின் விரிவான ஒரு அறிக்கை, ஆணைக்குழுவின் தலைவரிடம் 19 சித்திரை 2012 அன்று கையளிக்கப்பட்டது.

### 1.2 முகாமைத்துவத்தின் பொருளாதார கூற்றுக்களுக்கான பொறுப்புக்கள்

---------------------------------------------------------------------------------------------------------------

இலங்கை கணக்காய்வு தரநிர்ணயத்திற்கேற்ப இந்த பொருளாதார கூற்றுக்களை தயாரிப்பதும், பொருத்தமாக வெளியிடுவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். பொருளாதார கூற்றுக்கள் தயாரிப்பை இயலுமாக ஆக்குவது முகாமைத்துவம் தீர்மானிப்பதற்கு உள்ளக கட்டுபாட்டுக்காக அவசியமானதாகும். இது தவறுகள் மற்றும் மோசடிகள் காரணமாக உருவாகும் தவறு கூற்றுக்களிலிருந்து விடுவிக்கப்பட்டதாக இருக்கும்.

1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---------------------------------------------------

எனது கணக்காய்வுகளின் படி இந்த பொருளாதாரக் கூற்றுக்களின் மீதான அபிப்பிரயங்களைத் தெரிவிப்பது எனது கடமையாகும். இலங்கை கணக்காய்வு தரநிர்ணயத்தின் படியே நான் எனது கணக்காய்வை நடாத்தினேன். இத்தகைய தரநிர்ணயம். பொருளாதாரக் கூற்றுக்கள், தவறான கூற்றுக்களை கொண்டுள்ளனவா இல்லையா என ஏற்றுக்கொள்ளக்கூடிய உறுதிப்பாட்டை பெறுவதற்கான கோட்பாட்டு ரீதியான தேவைகள், திட்டங்கள் மற்றும் செயற்பாடுகள் என்பவற்றை செய்ய வேண்டியிருக்கும்.

பொருளாதாரக் கூற்றுக்களின் தொகைகள் மற்றும் தெரிவிக்கப்பட்ட விபரங்கள் பற்றிய கணக்காய்வு சாட்சிகளை பெற்றுக்கொள்வதற்கு செயற்பாடுகளை மேற்கொள்ளுதலை ஒரு கணக்காய்வானது உள்ளடக்குகிறது.

இந்த தேர்ந்தெடுக்கப்பட்ட செயற்பாடுகள் கணக்காய்வாளரின் மதிப்பீட்டில் தங்கியுள்ளது. இது தவறான பொருளாதார கூற்றுக்களின் மோசடியாக அல்லது தவறா என மதிப்பிடுவதை உள்ளடக்கியுள்ளது. இத்தகைய ஆபத்துக்குள்ளான மதிப்பீடுகளை மேற்கொள்வதற்கு ஆணையாளரின் முன்னேற்பாட்டிற்கு பொருத்தமான உள்ளக கட்டுப்பாட்டையும் பொருளாதாரக் கூற்றுக்களின் பாரபட்சமற்ற சமர்பணங்களையும், கணக்காய்வு செயற்பாடுகளை வடிவமைப்பதற்கு கணக்காய்வாளர் கருத்தில் கொள்ளல். இச் சூழ்நிலைகளுக்கு பொருத்தமானவையாக இருக்கும். ஆனால் ஆணையாளரின் உள்ளகக் கட்டுப்பாட்டின் வினைத்திறன் மீது ஒரு அபிப்பிராயத்தை தெரிவிப்பதற்கான நோக்கத்திற்காக அல்ல. ஒரு கணக்காய்வானது, பயன்படுத்தப்பட்ட கணக்கியல் மதிப்பீடுகளின் உண்மைத் தன்மையையும் உள்ளடக்குகிறது. அதேபோல், நிதிக்கூற்றுக்களின் மொத்த வெளிப்பாட்டை மதிப்பீடு செய்வதையும் உள்ளடக்குகிறது.

1971ம் ஆண்டின் நிதிச்சட்ட இல 38 இன் 13ம பிரிவிலுள்ள உபபிரிவான (3-4) என்பன, கணக்காய்வின் நோக்கத்தையும் விரிவாக்கத்தையும் தீர்மானிப்பதற்கு கணக்காய்வாளர் நாயகத்திற்கு அதிகாரம் அளிக்கின்றது. எனது தரமான கணக்காய்வு அபிப்பிரயாத்தின் படி, நான் பெற்றுக்கொண்ட கணக்காய்வு ஆதாரங்கள் ஒரு அடிப்படையை ஏற்படுத்துவதற்கு போதுமானவையாகவும், பொருத்தமாவையாகவும் உள்ளன என நான் நம்புகின்றேன்.

1.4 தராதரமான அபிப்பிரயாத்தின் அடிப்படை

-----------------------------------------------------------

இந்த அறிக்கையின் பந்தி 2.2ல் விபரிக்கப்பட்டுள்ள விடயங்கள் மீதான அடிப்படையிலேயே எனது அபிப்பிரயாம் தராதரப்படுத்தப்பட்டுள்ளது.

2 நிதிக்கூற்றுக்கள்

-------------------------

2.1 தராதரப்படுத்தப்பட்ட அபிப்பிராயம்

---------------------------------------------------

எனது அபிப்பிராயத்தின் படி, இந்த அறிக்கையின் பந்தி 2.2 ல் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் விளைவுகளை தவிர நிதிக்கூற்றுக்களாவன, தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப ஆணைக்குழுவின் 31 மார்கழி 2011ல் உள்ள நிதிநிலைமைகளின் உண்மையையும் பாரபட்சமற்ற ஒரு நோக்கையும் கொடுக்கின்றன. அத்துடன் இலங்கை கணக்கியல் தரப்படுத்தல் சபைக்கு அமைய முடிவடைந்த அந்த வருடத்திற்கான அதனுடைய நிதிச் செயற்பாடுகளையும், காசு பரிமாற்றங்களையும் கொடுக்கின்றன.

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான அபிப்பிராயங்கள்

----------------------------------------------------------------

2.2.1 இலங்கை கணக்கியல் தரப்படுத்தல்

-----------------------------------------------------

பின்வரும் அவதானங்கள் மேற்கொள்ளப்பட்டன.

(a) கணக்கியல் தரப்படுத்தல் இல. 3 இந்த நிதிக்கூற்றுக்களில் பங்குகளின் எல்லா மாற்றங்களையும் காட்டக்கூடிய பங்குகளில் மாற்றங்கள் பற்றிய ஒரு கூற்று உள்ளடக்கப்படவில்லை

(b) கணக்கியல் தரப்படுத்தல் இல. 16சேவை அன்பளிப்பு கொடுப்பனவுக்காக மீள்பார்வையின் கீழ் வருட முடிவில் ரூபா 268,407 அளிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த தொகை முதலீடு செய்யப்படவில்லை. இது நிதிக்கூற்றுக்களில் தெரியப்படுத்தப்படவில்லை.

(c) தரப்படுத்தல் இல. 18அந்த வருடத்தில் ரூபா 9,172, 481க்கு கொள்வனவு செய்யப்பட்ட நிலையான சொத்துக்கள் மீள்பார்வையில் குறிப்பிடப்படவில்லை.

2.2.3 சட்டம், ஒழுங்குமுறை ஆகியனவற்றுடன் இணக்கப்பாடற்றவை.

கணக்காய்வின் போது பின்வரும் இணக்கப்பாடற்ற சந்தர்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டம் மற்றும் ஒழுங்குமுறை ஆகியன | இணக்கப்பாடின்மை |
|---|---|
| (a) | நிதிச்சட்டம் இல 38/1971 |
| பிரிவு 8(1) | சம்பந்தப்பட்ட நிதி ஆண்டின் தொடக்கத்திற்கு ஆகக் குறைந்த 3 மாதங்களுக்கு முன்பதாக இயக்குனர் சபை வரவு செலவு திட்டத்தை அனுமதிக்க வேண்டியதாக இருந்த போதிலும், இந்த அறிக்கையின் நாள்வரை அது அனுமதிக்கப்படவில்லை |
| பிரிவு 14 (1) | அவ்வாண்டின் கணக்குகள் முடிக்கப்பட்ட பின்னர் 60 நாட்களுக்குள் வருடாந்த அறிக்கையின் மாதிரி சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (b) பரிசோதனைகளின் | நிதி ஒழுங்கு 135குழுவின் திட்டத்தினுள் உள்ளக போதியளவை உறுதிப்படுத்துவதற்கு முடியுமான வரையில் செயற்பாட்டுக் குழு அமைக்கப்பட வேண்டும். ஆனால் ஆணைக்குழுவின் 03 உத்தியோகத்தர்களுக்குப் பதிலாக 02 உத்தியோகத்தர்கள் மாத்திரமே நிதிச் செயற்பாடுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளனர். |
| (c) | சுற்றுநிருப வழங்கல் |
| (i) இல. PED/12/01 ஆனி 2003 | பொது ஸ்தாபன சுற்றுநிருபம் |
| பிரிவு 6.5.3 | நிதியாண்டு முடிவடைந்த பின் 150 நாட்களினுள் ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2008 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையே இறுதியாக சமர்பிக்கப்பட்டுள்ளது. |

| | |
|---|---|
| பிரிவு 8.3.5 (c) | ஒரு பொருத்தமான வகைப்படுத்தலின் கீழ் கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டு விநியோகஸ்தர் தெரிவு செய்யப்பட வேண்டுமாக இருந்த போதிலும் இதற்கு மாறாக,முன்னைய பல வருடங்களைப் போலவே மீள்பார்க்கப்பட்ட அந்த வருடத்திலும் இயந்திர வாகனங்கள் வாடகை அடிப்படையில் பெறப்பட்டுள்ளன. |
| பிரிவு 8.3.7 | வரவு செலவு திட்டத்தில் கொடுக்கப்பட்டதும், வகைப்படுத்தப்பட்டதுமான நிலையான சொத்துக்களை கொள்வனவு செய்வதற்கு இயக்குனர் சபையின் முன் அனுமதி பெற்றுக்கொள்ளப்படவேண்டியிருந்த போதிலும ரூபா 506,640 பெறுமதியான சொத்துக்களின் கொள்வனவிற்கு இயக்குனர் சபையின் அனுமதி பெற்றுக் கொள்ளப்படவில்லை. |
| பிரிவு 9.6 | சம்பள அதிகரிப்பு வழங்குவதற்காக ஒரு தகுதி தரநிர்ணய திட்டம் அமுல்படுத்தப்படவில்லை 2011 ஆண்டிற்கான சம்பள அதிகரிப்பு எல்லா ஊழியர்களுக்கும் வழங்கப்பட்ட போதிலும், சம்பள உயர்வு விண்ணப்பம், தனிப்பட்ட கோப்புக்களில் போடப்படவில்லை. |

2.2.3 சம்பந்தப்பட்ட அதிகார சபையினால் உதவியளிக்கப்படாத பரிமாற்றங்கள்.

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(a) ஆணைக்குழுவின் ஒரு அலுவலரினால் சமர்ப்பிக்கப்பட்ட சுகவீன கடன் விண்ணப்பமானது, நிதி ஒழுங்கு 135 இன் செயற்பாட்டின் படி குழுவில் இல்லாமல், அப்பதவிக்கு பொருத்தமற்ற ஒரு அலுவலரினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் காசோலையாக வழங்குவதற்கு பதிலாக கடன்தொகை ரூபா 282,004 பணமாக வழங்கப்பட்டுள்ளது.

(b) தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப ஆணைக்குழுவின் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப செயற்பாடுகளுக்காக இரண்டு ஆராய்ச்சி உதவியாளர்கள் மீள்பார்க்கப்படும் இந்த ஆண்டின் ஆனி மாதத்திலிருந்து வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளார்கள். இது சம்பந்தமாக பின்வரும் அவதானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- மாதாந்த முன்னேற்பாட்டு திட்டத்தின் அனுமதியின்றி மீள்பார்க்கப்படும் இந்த வருடத்தில் மேற்குறிப்பிடப்பட்ட இரு அலுவலர்களுக்கும் மொத்தமாக ரூபா 205,850 வழங்கப்பட்டுள்ளது.

- இந்த அலுவலர்கள் அதே செயற்பாடுகளை செய்த சந்தர்ப்பங்களை இவ்விரு அலுவர்களின் செயற்பாட்டு அறிக்கை தெளிவுபடுத்துவதுடன் ஆணைக்குழுவின் கடமை நிரலிலுள்ள வேறொரு அலுவலருக்கு ஒதுக்கப்பட்ட செயற்பாடுகளை அவர்களே செய்ததையும் தெளிவுபடுத்துகிறது.

3. நிதி மீள்பார்வை

------------------------

3.1 நிதி முடிவுகள்

----------------------

சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகளின் படி 31 மார்கழி 2011 உடன் முடிவடைந்த ஆண்டில் ஆணைக்குழுவின் வேலைகள் அரசாங்கத்திடமிருந்து மானியமாக தொடருகின்றது. செலவினங்களுக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 12,662,000 வை கணக்கில் கொண்டதன் பின் ரூபா 808, 065 துண்டுவிழும் தொகையாக முடிவடைந்தது. இது இதற்கு முன்னைய வருடத்தில் தொடரும் செலவினங்களுக்காக அரசாங்கத்திடமிருந்து மானியமாக பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 13,325,000 இனை கணக்கில் கொண்டதன் பின் ரூபா 776,544 மேலதிகமாக இருந்தது. இதன் படி மீள்பார்க்கப்படும் வருடத்தில் ரூபா 1,584,609 நிதி குறைவு குறிக்கப்பட்டது. இதற்கான காரணம், விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப செயற்பாடுகளுக்காக மீள்பார்க்கப்படும் ஆண்டில் பெறப்பட்ட அரசாங்கத்தின் மானியம் ரூபா 2,279,400 ஆல் குறைவடைந்ததாகும்.

4. செயற்பாட்டு மீள்பார்வை

-------------------------------------

4.1. செயற்பாடு

---------------

ஆணைக்குழுவின் செயற்பாட்டுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட நோக்கங்களை அடைவதில் ஏற்பட்ட சித்தியின்மையுடன் சம்பந்தப்பட்ட அவதானங்கள்.

(a) மீளாய்வு வருடத்திற்கான செயற்பாட்டுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட ரூபா 1,225 மில்லியன் பெறுமதியான கணிப்பீடு செய்யப்பட்ட வழங்கலுக்கான நான்கு செயற்பாடுகளை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(b) இந்த ஆண்டில் செயற்பாட்டுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட ரூபா 2.74 மில்லியன் பெறுமதியாக கணிப்பீடு செய்யப்பட்ட 03 செயற்பாடுகள் செலவினமாக ரூபா 0.8867 மில்லியனை எட்டியது.

(c) இந்த மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் விஞ்ஞான தொழில்நுட்ப ஆணைக்குழுவினால் செலவு செய்யப்பட்ட நிதி செயற்பாடுகள் பின்வருமாறு.

(i) செயற்திட்டத்தின் படி விஞ்ஞானம் மற்றும் கணிப்பீட்டிற்கும் செயற்பாட்டு

| எதிர்வு கூறப்பட்ட வருடாந்த செலவு | தொழில்நுட்ப செயற்பாட்டுக்களுக்கான சரியான செலவு | செலவிற்கும் இடையிலான வெளி | வீதம் |
|---|---|---|---|
| ரூபா 4.165 மில்லியன் | ரூபா 0.887 மில்லியன் | ரூபா 3.278 மில்லியன் | 21.29% |

(ii) விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப செயற்பாடுகளில் 05 வருட காலத்திற்கான ஆணைக் குழுவின் செயற்பாடுகள் பின்வருமாறு.

| ஆண்டு | மதிப்பீடு செய்யப்பட்ட செலவு (ரூபா) | உண்மையான செலவு (ரூபா) | வித்தியாசம் (ரூபா) | செயற்பாட்டு வீதம்% |
|---|---|---|---|---|
| 2011 | 4,165,000 | 887,267 | 3,277,731 | 21.30 |
| 2010 | 6,090,000 | 3,320,008 | 2,769,992 | 54.52 |
| 2009 | 3,145,000 | 990,286 | 2,154,714 | 31.46 |
| 2008 | 6,501,000 | 2,943,509 | 3,557,491 | 45.28 |
| 2007 | 2,800,000 | 1,632,428 | 1,167,572 | 58.30 |

(iii) இரு வருடங்களுக்கு ஒருமுறை நடாத்தப்படும் மாநாட்டிற்குரிய செலவினங்களை விட ஏனைய செயற்பாடுகளில் ஆணைக்குழுவின் செயற்பாடுகள் மிகவும் தாழ்மட்டத்திலேயே இருப்பது அவதானிக்கப்பட்டது.

| ஆண்டு | மதிப்பீடு செய்யப்பட்ட செலவு (ரூபா) | உண்மையான செலவு (ரூபா) | வித்தியாசம் (ரூபா) | செயற்பாட்டு வீதம் % |
|---|---|---|---|---|
| 2011 | 3,665,000 | 887,269 | 2,777,731 | 24.26 |
| 2010 | 3,090,000 | 778,505 | 2,311,495 | 25.19 |
| 2009 | 3,145,000 | 980,431 | 2,164,569 | 31.17 |
| 2008 | 3,546,000 | 948,046 | 2,597,954 | 26.74 |
| 2007 | 2,800,000 | 1,632,428 | 1,167,572 | 58.38 |

## 4.2 முகாமைத்துவ திறமையின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டவை

(a) ஒரு பதவி வெற்றிடமானது நிரப்புப்படாமல் நீண்ட காலத்திற்கு ஒரு உப பதவியினால் பராமரிக்கப்படும் சந்தர்ப்பத்தில், அந்த பொருத்தமான அமைச்சின் செயலாளர் அத்தகையை பதவியை மேலும் வைத்துப் பராமரிப்புத் தேவையைப் பற்றி விசாரணை செய்ய வேண்டும். மேலும் 01 ஆவணி 2010 அன்று ஆணைக்குழுவின் பதில் இயக்குனர் பதவிக்கு நியமிக்கப்பட்ட அலுவலரை இத்தகையை நிலைமையை திருப்பதிப்படுத்தாமல் 01 வருடம் 04 மாதங்களுக்கு மேலாக அந்த தரத்தில் அமர்த்தப்பட்டுள்ளார்.

(b) கூட்டுச்சேரா தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப நிலையத்திற்கு (NAM நிலையம்) 2011/2012 ஆண்டிற்கான வருடாந்த பங்களிப்பாக மீள்பார்க்கப்படும் வருடத்தில் மொத்தமாக ரூபா 1,106,693 செலுத்தப்பட்டிருந்த போதிலும், ஒரு மட்டுப்படுத்தப்பட்ட பயன்பாடு இந்நாட்டின் முன்னேற்றத்திற்கு இந்தப் பங்களிப்புடன் பொருத்தப்பாடானதாக இல்லை. 2011 ஆம் ஆண்டில் இந்தப் பங்களிப்புடன் சம்பந்தப்பட்ட 03 அலுவலர்களே பங்குபற்றினார்கள். தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப ஆணைக்குழுவானது, 2011 ஆம் ஆண்டிலிருந்து இலங்கைக்கான NAM நிலையத்தின் மூல நிலையமாக தொழிற்படுகின்றது. அத்துடன் பயிற்சித் திட்டங்களில் பங்குபற்றிய பின்னர் நாடு திரும்பிய மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையான அலுவலர்களினால் பெறப்பட்ட பயிற்சியிலிருந்து இந்நாட்டின் விஞ்ஞான முன்னேற்றத்திற்கு செய்யப்பட்ட பங்களிப்பு சம்பந்தமாக எதுவித பின்னூட்டல் செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படவில்லை.

4.3 அலுவலர்கள் நிர்வாகம்

---------------------------------

தனிப்பட்ட கோப்புக்களை ஆராய்வதன் மூலம் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(a) ஆணைக்குழுவிடம் ஒரு இயந்திர வாகனம் மட்டுமே இருந்த போதிலும் ஆணைக்குழுவிற்கான இயந்திர ஓட்டுநரின் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை 03 ஆகும். ரூபா 323,000 மீள்பார்க்கப்படும் இவ்வருடத்தில் 02 மேலதிக இயந்திர ஓட்டுநர்களுக்கு சம்பளமாக வழங்கப்பட்டுள்ளது.

(b) சம்பளத் தரத்தின் MA 1-2-2006 இன்கீழ், 2003ம் ஆண்டில் தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப ஆணைக்குழுவினால் வேலைக்கமர்த்தப்பட்ட ஒரு அலுவலரின் சம்பள மீளாய்வில் அந்த அலுவலரின் சம்பளப் படி நிலைக்கு 08 படி நிலைகள் மேலாக அவரின் சம்பளம் தயாரிக்கப்பட்டுள்ளது. இத்தகையை சம்பளம் மொத்தமாக ரூபா 300,126 மேலதிகமாக 15 மாசி 2012 வரை வழங்கப்பட்டுள்ளது.

(c) ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்ட பதவி இடங்கள் 16 ஆகும். உண்மையான பதவி இடங்கள் 13 ஆக உள்ள நிலையில், 03 அலுவலர் பதவி வெற்றிடங்கள் இன்னும் உள்ளது.

5 பதிலிறுத்தலும் சரியான நிர்வாகமும்

---------------------------------------------------

5.1 உள்ளக கணக்காய்வு

------------------------------

ஒரு தனியான உள்ளகக் கணக்காய்வு அலகு ஏற்படுத்தப்படவில்லை. உள்ளக கணக்காய்வை அமைச்சகத்தில் மீளாய்வுக்குட்படுத்தப்படும் வருடத்திற்கான ஒரேயொரு கணக்காய்வு அறிக்கை மட்டுமே விநியோகிக்கப்பட்டுள்ளது.

5.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

----------------------------------------------------------

ஆணைக்குழு ஏற்படுத்தப்பட்டு 12 வருட காலம் முடிவடைந்த பின்னரும், கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அமைக்கப்படவில்லை.

5.3 வரவு செலவு திட்ட கட்டுப்பாடு

ஆணைக்குழுவினால் தயாரிக்கப்பட்ட மீளாய்வு செய்யப்படும் ஆண்டிற்கான கொள்வனவுத் திட்டத்தின் படி கணிப்பீடு செய்யப்பட்ட செலவினங்கள் மொத்தமாக ரூபா 1.33 மில்லியன் ஆகும். அந்த வருடத்தில் 03 வகையான சொத்துக்களை கொள்வனவு செய்வதற்காக செலவிடப்பட்ட மொத்தத் தொகையான ரூபா 506,640 கொள்வனவுத் திட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை.

6 திட்டங்களும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வுக் காலப் பகுதியின் போது அவதானிக்கப்பட்ட திட்டங்கள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள பற்றாக்குறைகள் காலத்திற்குக் காலம் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது.

கட்டுப்பாட்டின் பின்வரும் விடயங்கள் பற்றி விஷேட கவனம் அவசியமாகும்.

(a) தனிப்பட்ட கோப்புக்களை புதுப்பித்துக்கொள்ளல்

(b) உள்ளக கணக்காய்வுத் திட்டங்களின் தயாரிப்பும் அமுல்படுத்துகையும்

(c) ஊழியர்களின் பயன்பெறுகைகள்

(d) வரவு , விடுமுறை பதிவேடுகள்

(e) தனிப்பட்ட கோப்புக்களில் சம்பள அதிகரிப்பு படிவங்களை நிரப்புதல்

(f) நிதி ஒழுங்குச் சட்டம் 135 ன் கீழ் விழாக்களுக்கான குழுக்கள்

(g) கணக்கு (நிலையான சொத்துக்களின் தேய்வு, சஞ்சிகை பதிவுகளை தயாரித்தல் முதலியன)

(h) வங்கி இணக்கக் கூற்றுக்களின் தயாரிப்பு

H.A.S.சமரவீர
கணக்காய்வாளர் நாயகம்

கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைக்கான பதில் விரைவில் உமக்கு அனுப்பி வைக்கப்படும்.

## தொடர்பிற்கான தகவல்கள்

தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப ஆணைக்குழு
இல 223c, நாவல வீதி
நாரஹேன்பிட்ட
கொழும்பு -05
தொலைபேசி இல : 011-2807945, 2808947, 2807346
தொலை நகல் : 011-2807347
e-mail :nastcsl@yahoo.com

| பதவி | நீடிப்பு | நேரடி இணைப்பு |
|---|---|---|
| தலைவர் | 201 | 2807341 |
| பதில் இயக்குனர் | 207 | 2807342 |
| விஞ்ஞான திட்ட முகாமையாளர் | 205 | 2807343 |
| கணக்காய்வாளர் | 204 | 2807344 |
| நிறைவேற்று செயலாளர் | 220 | 2807345 |